## 20. என்னிலே ஒன்றுமில்லை

பல்லவி

என்னிலே ஒன்றுமில்லை
நான் என்னை மேன்மை பாராட்ட

அனுபல்லவி

*உம் கிருபையால் நிற்கிறேனே*
*உம் இரக்கத்தால் நிலைக்கிறேனே*

சரணங்கள்

1. பைத்தியமான என்னை தெரிந்து கொண்டீர்
   ஞானமான உம் வார்த்தை எனக்கு தந்தீர்
   - உம் கிருபையால்

2. பெலவீனமான என்னை தெரிந்து கொண்டீர்
   பெலனான உம் ஆவியை எனக்கு தந்தீர்
   - உம் கிருபையால்

3. கனவீனமான என்னை தெரிந்து கொண்டீர்
   கனமான உம் துதிப்பாடல் எனக்கு தந்தீர்
   - உம் கிருபையால்

4. அற்பமான என்னை தெரிந்து கொண்டீர்
   அற்புதம் செய்யும் வல்லமை எனக்கு தந்தீர்
   - உம் கிருபையால்